<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

<u>MCOP - 66/2018</u>

நாள் – 23.01.2025

<u>PW – 1</u> : விஸ்வநாதன்.

த/பெ. : ஈஸ்வரமூர்த்தி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of January 2025)**

<u>குறுக்கு விசாரணை</u>

1. இந்த விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் போலீசார் மருத்துவமனைக்கு வந்து என்னிடம் விசாரித்து வாக்குமூலம் எழுதி கொண்டு கையொப்பம் வாங்கி சென்றார்கள். விபத்து சமயம் இருசக்கர வாகனத்தை நான் தான் ஓட்டிச் சென்றேன். நான் சொல்வது பொய் என்றும், விபத்து சமயம் வாகனத்தை எனது மனைவி கோமதி தான் ஓட்டிச் சென்றார் என்று சொன்னால் இல்லை, நான் தான் ஓட்டிச் சென்றேன். விபத்து சமயம் எனது மனைவி தான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றும், அது குறித்த ம.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த பிறகு யார் என்னை கோபி தட்சின் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் வெள்ளியங்கிரி தான் அழைத்துச் சென்று சேர்த்தார். எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு மருத்துவர் வழங்கிய காயச்சான்றில் சாதாரண காயங்கள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. விபத்து சமயம் நான் பனியன் கம்பெனி வைத்திருந்தேன். அந்த பனியன் கம்பெனியின் பெயர் எதுவும் மனுவிலும்,

பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. நான் மாதம் ரூ.15,000/- சம்பாதித்து வந்ததாக இந்த வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் இந்த வழக்கிற்காக வேண்டி போலியாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தானது எனது மனைவியின் அஜாக்கிரதையால் தான் ஓட்டிச் சென்று வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும், அதனால் 2-ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள நஷ்ட ஈடு தொகையும், வட்டிவீதமும் அதிகம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த மனுவானது 2-ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.01.23 18:27:36 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**